மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 08 ம் நாள்வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.03/2024
இன்
அசல் வழக்கு எண்.33/2022
-------

பாண்டியம்மாள் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. துர்க்கைபாண்டி
2. லீலா . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 25.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. B. முத்துக்கண்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. முத்துக்கண்ணு, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது கடந்த 16.10.2023 ம் தேதி மனுதாரருக்கு எதிராக தாவா அசல் வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவை நீக்கரவு செய்ய மனு செய்ய ஏற்பட்ட 90 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து தாவா மனுவை கோப்பிற்கு எடுத்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 9 விதி 9 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கிற்கு

இந்நிர் எதிர்மனுதாரர்கள் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை நீக்கரவு செய்ய எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு செய்துள்ளதாகவும், அதன்பின்பாக வழக்கு விசாரணைக்கு வரும் சமயம் அழைப்பதாக வழக்கறிஞர் கூறியிருந்தார். இச்சூழலில் மனுதாரர் கடந்த 15.09.2023 ம் தேதி முதல் வீட்டில் வழுக்கி விழுந்து, காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வந்துள்ளார். தற்பொழுது கடந்த 27.10.2023 ல் மனுதாரருடைய வழக்கறிஞரை அணுகி வழக்கு குறித்து விபரத்தை கேட்டபொழுது வழக்கானது கட்டாய விசாரணைக்காக 16.10.2023 ல் வாய்தா இடப்பட்டிருந்ததும், மனுதாரருடைய வருகையின்மையால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று விபரம் கூறி தெரிந்து கொண்டேன் என்றும், அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட 30 தினங்களுக்குள் மனு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2.2. மனுதாரருடைய உடல் நோயால் அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க மனு செய்ய 90 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கை மனுதாரருக்கு மேல் நடத்த நல்ல கட்சி உள்ளது. தாவா அசல் வழக்கு தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்து தாவா வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது. மேற்படி மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு அநேக கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனு தாக்கல்.

3. **இ.ம.எண்.02/2024 மனுவில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, இ.ம.,ண்.03/2024 மனுவில் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் –**

3.1. மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்ற அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை மற்றும் கற்பனையானவையாகும். மனுதாரர்/வாதி 1ம் எதிர்மனுதாரரின் பெயரை

துர்கைபாண்டியன் என்பதை தவறாக துர்கைபாண்டி என்று உள்ளிட்டுள்ளார். மனுதாரர்/வாதிக்கு எந்த வழக்கு மூலமும் கிடையாது. எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகளை வீண் அலைச்சல் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடும், ஷை வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்றும், காதாமத மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப் படவில்லை.

**6.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.02/2024 மனுவானது தகுந்த செலவுத் தொகையில் அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து 25.08.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இ.ம.எண்.02/2024 மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் இந்த மனுவையும் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க வாய்தா 25.08.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, **2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08–ம்** நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்
இ.ம.எண்.03/2024
இன்
அ.வ.எண்.33/2022
**உத்தரவு**
நாள்–08.08.2025.